இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 25.09.2026

# ஞானேஷ்குமார் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்!

“தனி ஆவர்த்தனம் செய்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் இனியும் பதவியில் நீடிக்கக் கூடாது: உடனடியாக அவர் நீக்கப்பட வேண்டும்!” என்று தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். அகில இந்தியத் தலைவர்கள் பலரும் இதே கோரிக்கையை விடுத்துள்ளார்கள்.

**இந்தியத் தேர்தல் ஆணையம் வெளிப்படைத் தன்மையுடன், சுதந்திரமாக, ஜனநாயகப் பூர்வமாகச் செயல்பட வேண்டிய அமைப்பு ஆகும். ஆனால் அது தலைமைத் தேர்தல் ஆணையரான ஞானேஷ் குமாரின் தன்னிச்சையான அமைப்பாக மட்டுமே செயல்பட்டுள்ளது. மற்ற தேர்தல் ஆணையர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்பதைவிட, அவர்களது ஆலோசனைகளுக்கு மாறாக ஞானேஷ்குமார் நடந்து வந்துள்ளது அம்பலம் ஆகி உள்ளது.**

மூன்று தேர்தல் ஆணையர்களில் இருவர், கடந்த 10 மாதங்களில் வாக்காளர்களைச் சேர்த்தல், பெயர்களை நீக்குதல், மீண்டும் சேர்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் தரவுகளைக் கையாளுதல் தொடர்பான முடிவுகளுக்கு குறைந்தது 14 முறை முறையான எதிர்ப்புகளைப் பதிவு செய்துள்ளனர் என்பதை ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு வெளிப்படுத்தி இருக்கிறது.

‘சிறப்புத் தீவிர திருத்தம்’ (SIR) என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கான மக்களின் பெயர்களை நீக்கும் முடிவை ஜனநாயக சக்திகள் அனைவரும் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். அந்தக் குற்றச்சாட்டு எதற்கும் இந்தியத் தேர்தல் ஆணையம் முறையான பதிலைத் தரவில்லை. எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமல்ல, உடனிருந்து பணியாற்றும் மற்ற தேர்தல் ஆணையர்களுக்கும் உரிய பதில் தரப்படவில்லை. அவர்களது எதிர்ப்பை மீறியே தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் செயல்பட்டுள்ளார்.

**மற்ற இரு தேர்தல் ஆணையர்களான சுக்பிர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகிய இருவருக்கும், தேர்தல் கமிஷனில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் வைத்துள்ளார். கடந்த 10 மாதங்களில் 14 முறை அவர்கள் இருவரும் ஞானேஷ்குமார் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். அதனை ஞானேஷ்குமார் மதிக்கவே இல்லை. இதை வெறும் ஈகோ மோதலாகச் சுருக்கி விட முடியாது. தனது செயல்களை மற்ற ஆணையர்களுக்கு மறைப்பதன் மூலமாக பல்வேறு சதிச்செயல்களை மறைமுகமாக ஞானேஷ்குமார் செய்துள்ளார் என்றே சொல்ல வேண்டும்.**

**இதை வைத்துப் பார்க்கும் போது SIRக்குப் பின்பு நடந்த அனைத்துச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளிலும் சந்தேகம் ஏற்படுகிறது.**

**“நீதிமன்றமே தலையிட்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கச் சொன்ன பிறகும், அவர்களது பெயர்களைச் சேர்ப்பதற்கு எதிராக மேல்முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. யார் இதனைச் செய்தது? அதுகுறித்துக் கூட எங்களுக்குத் தெரியவில்லை. சட்டப்படி வாக்காளர் பட்டியலில் திருத்தங்களைச் சரிபார்த்து மேற்கொள்ள ERO எனப்படும் வாக்காளர் பதிவு அலுவலர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், தகுதியுள்ள வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் அவர்களால் சேர்க்க முடியவில்லை. அதைச் செய்வதற்கான ERONet வலைதளம் முற்றிலுமாக ஒருவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. எங்களால்கூட அதனை அணுக முடியவில்லை” என இரண்டு தேர்தல் ஆணையர்களும் தெரிவித்துள்ளார்கள் என்றால், ஞானேஷ்குமார் காலத்தில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்தும் எப்படி ஜனநாயகத் தேர்தல்களாக இருந்திருக்க முடியும்?**

கடந்த மார்ச் மாதத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதை நாடு மறந்திருக்காது. எதிர்க்கட்சிகள் சந்தேகப்பட்டது சரியானதுதான் என்பதை இரண்டு தேர்தல் ஆணையர்களும் உறுதி செய்துள்ளார்கள்.

பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் எடுத்து வைத்து. ‘அங்கு வாக்குத் திருட்டு எப்படி நடந்துள்ளது’ என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அம்பலப்படுத்தினார். இவை இரண்டுக்கும் தானாக முன்வந்து பதில் அளித்திருக்க வேண்டும் தேர்தல் ஆணையம். மாறாக ராகுல் காந்தியை மிரட்டினார் ஞானேஷ்குமார்.

**“வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் தனது கையெழுத்துடன் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று உறுதி செய்யப்படும். அதற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மிரட்டினார். இப்போது இரண்டு தேர்தல் ஆணையர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார் ஞானேஷ்குமார்?**

“தேர்தல் ஆணையர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் எழுவது மிகத் தவறானது. இது வாக்காளர்களின் மனதில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தும். ஜனநாயகத்தில் இது துரதிஷ்டம்” என்று முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் ஓ.பி.ராவத், எஸ்.ஒய்.குரேஷி ஆகியோர் சொல்லி இருக்கிறார்கள்.

‘’சர்வாதிகாரத்துடன் செயல்பட்ட ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்வதுடன் அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்” என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்துள்ளன.

‘’மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும்” என்று உத்தவ் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே கோரிக்கை வைத்துள்ளார். “மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆருக்கு முந்தைய வாக்காளர் பட்டியலைப் பயன்படுத்தி மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்” என்று சொல்லி இருக்கிறார், மேற்கு வங்க மாநில முன்னாள் முதலமைச்சர் மம்தா பானர்ஜி.

இந்திய ஜனநாயகத்தை, தேர்தல் நடத்தைகளை, மக்களாட்சி மாண்புகளை குழிதோண்டிப் புதைக்கும் செயலைத்தான் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் செய்து வந்துள்ளார். அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். அவரது செயல்பாடுகள் அனைத்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உச்சநீதிமன்ற நீதிபதிகள் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்து முழுமையாக விசாரிக்க வேண்டும்.

### மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்: தி.மு.க. தலைமையிலான

# மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய தேசிய லீக் ஆதரவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!



சென்னை, செப். 25 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் இந்திய தேசிய லீக் மாநிலத் தலைவர் அல்ஹாஜ் எம். பஷீர் அஹமது, மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் அப்துல்காதர் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு இந்திய தேசிய லீக் முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு இந்திய தேசிய லீக் நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது திராவிட இயக்கமும் “திராவிட மாடல்” அரசின் மூலம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் சிறுபான்மை மக்களுக்கு ஆற்றிய பணிகளை அடியொற்றி தோழர் ஹாத்தம் அலி அவர்கள் எழுதிய “நல்லிணக்கத்தின் நாயகன் **M.K. STALIN”** நூல் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வின்போது தி.மு.க. செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் உடனிருந்தார்.

### ‘ஆதவன் எண்டர்டெய்ன்மெண்ட்’ சார்பில் ‘தி மிசா மார்க்’ ஆவணப்படம் வெளியீடு!

# ‘மிசா வடுக்கள்’ நூல்: கி.வீரமணி இன்று வெளியிடுகிறார்!

## முதல் பிரதியை கே.பாலகிருஷ்ணன் பெறுகிறார்! திருச்சி என்.சிவா எம்.பி. முன்னிலை! என்.ராம் - ஆவணப்படம் வெளியிடுகிறார்! சு.க. ஸ்ரீதரன் வரவேற்புரை!

**சென்னை, செப். 25-**

**ஆதவன் எண்டர்டெய்ன் மெண்ட் தயாரித்துள்ள ‘தி மிசா மார்க்’ (‘The Misa Mark’) ஆவணப்படம் மற்றும் ‘மிசா வடுக்கள்’ எனும் நூல் ஆகியவற்றின் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.**

இன்று (25.09.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில், சென்னை - வடபழனி-சாலிகிராமத்தில் அமைந்துள்ள ‘பிரசாத் கலர் லேப்’பில் நடைபெறும் இவ்விழாவில் - ஆவணப் படத்தின் இயக்குநரும் - நூலின் ஆசிரியருமான சு.க.ஸ்ரீதரன் வரவேற்புரையாற்றுகிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி., விழாவிற்கு முன்னிலை வகித்து வாழ்த்தி உரையாற்றுகிறார்.

‘மிசா வடுக்கள்’ தொகுப்பு நூலினை - திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

இந்நூலின் முதல் பிரதியை - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கே. பாலகிருஷ்ணன் பெற்றுக் கொள்கிறார்.

விழாவில் - ‘தி மிசா மார்க்’ ஆவணப்படத்தை இந்து என். ராம் அவர்கள் வெளியிடுகிறார்.

மேலும் இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக - கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், தோழர் தியாகு ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

மேலும் - கலாநிதி வீராசாமி எம்.பி., மார்க்சிஸ்ட் கட்சியின் டி.கே.ரெங்கராஜன், பேராசிரியர் மு.நாகநாதன், வழக்கறிஞர் எஸ். துரைசாமி, காங்கிரஸ் கட்சியின் ஆ.கோபண்ணா, திராவிடர் கழக துணைத் தலைவர் கலி. பூங்குன்றன், முன்னாள் எம்.பி., மிசா கணேசன், முனைவர் டி. ஜெகந்நாதன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), முன்னாள் எம்.எல்.ஏ., சோ.மா.இராமச்சந்திரன், மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ். பன்னீர் செல்வன், சுகுமார் சிட்டிபாபு, ஆர்.விஜய சங்கர், அப்துல் காதர் உசேன், சிறைத்துறை முன்னாள் டி.ஐ.ஜி., எஸ்.ராமச்சந்திரன், திருமதி ஆர்.டி.எஸ். தமிழ்ச்செல்வி, ஆசைத்தம்பி சௌந்தர பாண்டியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

சிங்கப்பூர் ‘ஆதவன் எண்டர்டெய்ன்மெண்ட்’டின் இரா.ராம்குமார் நன்றி கூறுகிறார்.

மேலும் இந்நிகழ்வில் - என். செந்தில்குமார், ஆர்.ராம்குமார், எம்.சண்முகம், ஏ.அருண்குமார், வானவில் பாலா, ஆர்.விஜயன், டி.லோகநாதன், என்.மணிமாறன், எஸ்.செழியன், பி.நூர் முகமது மற்றும் கும்பகோணம் வாணி விலாஸ் சபா குழு உறுப்பினர்கள், ஸ்ரீ சாய் கணேஷ் குழும உறுப்பினர்கள் உள்பட பலரும் கலந்து கொள்கிறார்கள்.

### கவுண்டம்பாளையம், குண்டுபாளையம், சுப்பையா நகர் பகுதியில்

# அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க தி.மு.க. வேட்பாளரை ஆதரியுங்கள்!

## பரப்புரையில் புதுச்சேரி தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா வேண்டுகோள்!



*புதுச்சேரி, செப். 25-*

*புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் சேதுசெல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம், புதுப்பேட், சுப்பையா நகர், குண்டுபாளையம் பகுதிகளில் தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா.சிவா ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் மாலை தி.மு.க. நிர்வாகிகள் வீடு, வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.*

*தொடர்ந்து நேற்று காலை கவுண்டம்பாளையம் பகுதியில் தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் மத்திய மாவட்டச் செயலாளர் டாக்டர் இலட்சுமணன் எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர்.*

*அப்போது வாக்காளர்களிடம் பேசிய தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா, கவுண்டம்பாளையம், கண்டுபாளையம், சுப்பையா நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் தெளிவான சிந்தனை உள்ளவர்கள். தட்டாஞ்சாவடி தொகுதியில் யார் ஜெயித்தால் தொகுதி மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை உணர்ந்தவர்கள். இப்பகுதி மக்களின் எழுச்சி மிகு வரவேற்பை பார்த்தாலே தெரிகிறது நிச்சயம் தி.மு.க. வேட்பாளருக்கு முழு ஆதரவு அளிப்பார்கள் என்று. மக்கள் போராளியான தி.மு.க. வேட்பாளர் சேதுசெல்வம் வெற்றி பெற்றால், பக்கத்து தொகுதிக்கு சென்று ரேஷன் பொருள் வாங்கும் அவலத்தைப் போக்கி கவுண்டம்பாளையம் பகுதியில் ரேஷன் கடை அமைத்து மக்களின் சிரமத்தை போக்குவார். பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாமல் உள்ள அங்கன்வாடி மையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வருவார். சுகாதாரமான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுப்பார். சரியான கட்டமைப்புடன் கூடிய கழிவுநீர் வாய்க்கால், குண்டும், குழியுமாக உள்ள சாலையை சீரமைத்தல், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட சரியான வழிகாட்டுதலுடன் கூடிய கடன் வசதி உள்ளிட்ட மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வார். ஆகவே அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

*வாக்கு சேகரிப்பின் போது, வானூர் சட்டமன்ற உறுப்பினர் கௌதம் திராவிடமணி, கண்டமங்கலம் சேர்மன் வாசு, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர் சீத்தாராமன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முகிலன், சுந்தர் உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.*